# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2377 - 2024 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2024.03.22

*2377 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 982 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 982 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 984 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மார்ச் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

## நியமனம்

*2024 இன் இல. 342*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. லலிந்த வீரரத்ன மாபலகம கமகே அவர்கள், 2024, பெப்புருவரி 02 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக கம்பஹா நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்/டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2024, மார்ச்சு 02.

03-369

# அரசாங்க அறிவித்தல்கள்

பதிவுசெய்தல் ஆ 96
(ஈ2)/2/64

## கட்டிடத்தைப் பதிவுசெய்யும் சான்றிதழ்

சான்றிதழ் இலக்கம் - 1546

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் பிரிவு) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கோரிக்கைப் பிரகடனத்திற்கு அமைய விஜயசிங்க ராஜபக்ஷ ஆரச்சிகே நலின் சமன்த விஜயசிங்க ஆகிய நான் பிரசித்திபெற்ற கிரிஸ்தவ தேவாலயமாக பயன்படுத்தப்படும் பின்வரும் கட்டிடத்தை விவாகம் செய்வதற்கு ஏற்ற விதிகளின் அடிப்படையில் பதிவுசெய்துள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் | | மாவட்டம் | சமயகுரு உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவுசெய்யப்பட்டிருப்பது எந்த சமயத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | கிராமம் அல்லது மற்றும் நகரப் பிரிவு | பற்று அல்லது கோரளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | | | |
| லூர்து மாதா தேவாலயம் | கிளனோர் தோட்டம் | ஹப்புத்தளை | பதுளை | கௌரவ சமீர பெரேரா அருள்தந்தை அவர்கள் | உரோமன் கத்தோலிக்கம் |

2024 ஆம் ஆண்டின் 03 ஆம் மாதம் 04 ஆந் திகதி பத்தரமுல்லையில் கையொப்பமிடப்பட்டது.

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

03-363/1

---

பதிவுசெய்தல் ஆ 97
(எப்2)/2/64

## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## விவாகம் செய்வதற்கு தேவாலயங்களைப் பதிவுசெய்தல்.

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் பிரிவு) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கோரிக்கைப் பிரகடனத்திற்கு அமைய விஜயசிங்க ராஜபக்ஷ ஆரச்சிகே நலின் சமன்த விஜயசிங்க ஆகிய நான் பிரசித்திபெற்ற தேவாலயமாக பயன்படுத்தப்படும் பின்வரும் கட்டிடத்தை விவாகம் செய்வதற்கு ஏற்ற விதிகளின் அடிப்படையில் பதிவுசெய்துள்ளேன் என்பதை உறுதிப்படுத்து கின்றேன்.

| இலக்கம் | பதிவுசெய்யும் திகதி | விபரம் | அமைவிடம் | சமயகுரு உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவுசெய்யப்பட்டிருப்பது எந்த சமயத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1546 | 2024.02.26 | லூர்து மாதா தேவாலயம் | கிளனோர் தோட்டம் | கௌரவ சமீர பெரேரா அருள்தந்தை அவர்கள் | உரோமன் கத்தோலிக்கம் |

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2024, மார்ச் 09.

03-363/2

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2024.03.22 தொடக்கம் 2024.04.05 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடு வதற்கு தெல்கந்தை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2024.04.12 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்ஹ,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/09/2024/ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br><br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் II<br><br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br><br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் தெல்கந்த காணிப் பதிவகத்தின் தெஹி பிரிவின் 23 தொகுதியின் 129, 130 காணிப் புத்தக பிரதி (சுருக்கப் பிரதி) | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டி கோரளை பல்லே பற்று கொழும்பு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் தெஹிவளை - கல்கிசை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள “அம்பகஹவத்த” என்ற காணியின் காணித்துண்டு இலக்கம் 04 யிற்கான எல்லைகள்,<br><br>வடக்கு : காணித்துண்டு இலக்கம் 03;<br>கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 07 (ஜயவர்தன மாவத்தை);<br>தெற்கு : காணித்துண்டு இலக்கம் 05;<br>மேற்கு : நீர் வழி.<br><br>நிலத்தினளவு : 00ஏ. 00றூ. 6.75பே. | 1. பிரசித்த நொத்தாரிசு எம். எச். ஜீ. பெரேரா அவர்களினால் 1971.12.03 ஆந் திகதி எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 1150 ஆம் இலக்கத்தினை உடைய நன்கொடை உறுதி.<br><br>2. பிரசித்த நொத்தாரிசு சீ. ஏ. எஸ். ஜயவீர பண்டார அவர்களினால் 1999.03.21 ஆந் திகதி எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2074 ஆம் இலக்கத்தினை உடைய நன்கொடை உறுதி. |

03-388

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2023, நவெம்பர் 14 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

“காலி வக்வெல்லயைச் சேர்ந்த கலஹே ஆச்சாரிகே கார்ல்ஸ் வெஸ்மன் (கடன்பெறுநர்) என்பவர் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் பிரசித்த நொத்தாரிசு பி. கே. சூரியாராச்சி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.02.08 ஆந் திகதிய 1557 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017.02.08 ஆந் திகதிய 1559 ஆம் இலக்க முறி ஆகிய இரண்டின் மூலமும் பிரசித்த நொத்தாரிசு எச். கே. அனுஷா எம். குமாரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.29 ஆந் திகதிய 392 ஆம் இலக்க முறி மற்றும் 2018.10.30 ஆந் திகதிய 546 ஆம் இலக்க முறி ஆகிய இரண்டின் மூலமும் ஈடுவைத்து அடமானம் வைக்கப்பட்ட இதற்கான அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II இல் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளின் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப்பட்ட கடன்கள்/வசதிகள் மீதான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

அத்துடன் கடன் பெறுநர் கீழே உள்ள அட்டவணையில் பாகம் I மற்றும் பாகம் II இல் விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளின் இறையிலி சொந்தக்காரராக அவரது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறை என்பவற்றை சொல்லப்பட்ட முறிகளின் கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும்.

அத்துடன் 2023, ஒற்றோபர் 02 ஆந் திகதியில் உள்ளவாறு சொல்லப்பட்ட 1557, 1559, 392 மற்றும் 546 ஆம் இலக்க முறிகளின் மீது எண்பத்து இரண்டு மில்லியன் எட்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா 82,889,899.47) தொகை கடன்பெறுநரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும்.

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல்

(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் (முதன்மைச் சட்டம்) கீழ் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயலாற்றுகின்ற அப்பணிப்பாளர் சபை எண்பத்து இரண்டு மில்லியன் எட்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா 82,889,899.47) கூட்டுமொத்தத் தொகையை அல்லது விற்பனை இடம்பெறுகின்ற நேரத்தில் செலுத்தப்படாது எஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தை மற்றும் 2023, ஒற்றோபர் 03 ஆந் திகதியிலிருந்து விற்பனைத்தேதி வரையில் -

(i) சொல்லப்பட்ட 392 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஏழு மில்லியன் நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து எட்டு ரூபா (ரூபா 7,499,988.00) தொகையின் மீதான ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற வீதத்திலான வட்டியை,

ii) சொல்லப்பட்ட 1557 மற்றும் 1559 ஆம் இலக்க முறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறிகளின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஒன்பது மில்லியன் எட்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு ரூபா (ரூபா 9,823,734.00) தொகையின்மீதான ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற வீதத்திலான வட்டியை,

iii) சொல்லப்பட்ட 1557 மற்றும் 546 ஆம் இலக்க முறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறிகளின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000.00) தொகையின்மீதான ஆண்டுக்கு பதினெட்டு தசம் இரண்டு ஐந்து (18.25%) என்ற வீதத்திலான வட்டியை,

முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி உறப்பட்ட விளம்பரப்படுத்தல் விற்பனை கிரயங்கள் மற்றும் வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட முறிகளினால் சொல்லப்பட்ட கடன்கள்/ வசதிகள் என்பவற்றுக்கான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளுக்கான இறையிலி மற்றும் வேறு உரிமை உரித்து மற்றும் அக்கறை உட்பட ஆதனம் மற்றும் வளவுகள் உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

பாகம் I

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள், தங்கெதர கிழக்கு - 97D கிராம அலுவலர் பிரிவு, காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவினுள், தங்கெதரவில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து "பேரவைன்ன வத்த அத்தெர கும்புற மற்றும் ஓவிட்ட மறுபெயர் வெதகேகும்புற மறுபெயர் பறுஸ்ஸெ கும்புற மறுபெயர் பறுஸ்ஸெ ஓவிட்ட மறுபெயர் பொல்கொரடுவ எனவும் அழைக்கப்படும் தொரவல கானுவல அகபொட" என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் யூ. வேவல்வல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.09.15 ஆந் திகதிய 2460 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 15 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 15 இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: அதே காணியின் காணித்துண்டம் 16; கிழக்கு: அதே காணியின் காணித்துண்டம் 17 (20 அடி அகலமான வீதி); தெற்கு: அதே காணியின் காணித்துண்டம் 14 மற்றும் தொரவல கானுவல அகபொடவின் பாகம்; மேற்கு: தொரவல கானுவல அகபொடவின் பாகம்; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள், 2460 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றூ. 8.70பே) இனை கொண்டுள்ளது.

மேலே உள்ள காணி பின்வரும் காணியின் மீள் நிலஅளவையாகும்;

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள், தங்கெதர கிழக்கு - 97D கிராம அலுவலர் பிரிவு, காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவினுள், தங்கெதரவில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து "பேரவைன்ன வத்த அத்தெர கும்புற மற்றும் ஓவிட்ட மறுபெயர் வெதகே கும்புற மறுபெயர் பறுஸ்ஸெ கும்புற மறுபெயர் பறுஸ்ஸெ ஓவிட்ட மறுபெயர் பொல்கொரடுவ எனவும் அழைக்கப்படும் தொரவல கானுவல அகபொட" என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நில அளவையாளர் குசுமன் சிறிவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.01.20 ஆந் திகதிய 18A/ 1995 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டு 15 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 15 இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: காணித்துண்டம் 16; கிழக்கு: காணித்துண்டம் 17; தெற்கு: காணித்துண்டம் 14; மேற்கு: தொரவல கானுவல அகபொடவின் பாகம்; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள், 18A/ 1995 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றூ. 8.70பே) இனை கொண்டுள்ளதுடன் காலி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Q 185/22 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் குசுமன் சிறிவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.01.20 ஆந் திகதிய 18A/ 1995 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும்

காணித்துண்டம் 17 என அடையாளமிடப்பட்டதுமான வீதி வழி மீதான செல்வழி உரிமையுடனும் வேறு உரிமைகளுடனும் சேர்த்து.

பாகம் II

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள், மடபாதல - 97B கிராம அலுவலர் பிரிவு, காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவினுள், கும்பல்வெல்ல கிராமத்தில் மினுவங்கொடையில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து "லத்தா வத்த" என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். உயன்கொட என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.02.28 ஆந் திகதிய 5213 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் C என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் C இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: அதே காணியின் B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம்; கிழக்கு: காணித்துண்டம் $C^1$; தெற்கு: அதே காணியின் D என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம்; மேற்கு: தொல; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள், 5213 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் பூச்சியம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ. 9.08பே) இனை கொண்டுள்ளது.

மேலே உள்ள காணி பின்வரும் காணியின் மீள் நிலஅளவையாகும்;

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள், மடபாதல - 97B கிராம அலுவலர் பிரிவு, காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவினுள், கும்பல்வெல்ல கிராமத்தில் மினுவங்கொடயில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து "லத்தா வத்த" என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். வீரசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.01.09 ஆந் திகதிய 1531 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் C என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் C இன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு அதே காணியின் B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம் ; கிழக்கு : காணித்துண்டம் X ; தெற்கு : அதே காணியின் னு என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம் ; மேற்கு : எல பரப்பளவில் இது இவ்வெல்லைகளினுள், 1531 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் பூச்சியம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ. 9.08பே) இனை கொண்டுள்ளது.

மேலே உள்ள காணி பின்வரும் காணியின் மீள் நில அளவையாகும்.

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள், மடபாதல - 97B கிராம அலுவலர் பிரிவு, காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவினுள், கும்பல்வெல்ல கிராமத்தில் மினுவங்கொடயில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து "லத்தா வத்த" என அழைக்கப்படும் காணியினதாய் காலி மாவட்ட நீதிமன்றத்தின் 17677 ஆம் இலக்க வழக்கில் பதிவேட்டில் கோப்பிடப்பட்டதும் எப். ஏ. குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட Lr.C இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் C என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் C இன் எல்லைகள் பின்வருமாறு, வடக்கு: அதே காணியின் B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம்; கிழக்கு: கனேகொடவத்த; தெற்கு: அதே காணியின் D என அடையாளமிடப்பட்ட காணித்துண்டம்; மேற்கு: ஒற்றையடி பாதை மற்றும் தொல; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள், Lr. C இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் பூச்சியம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ. 9.08பே) இனை கொண்டுள்ளதுடன் காலி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 380/85 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பின்வருவன உட்பட, மேலே மேலும் விபரமாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு தற்போது அல்லது இதனகத்துப்பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய சகல மற்றும் தனியான அசையா பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி உபகரணங்கள் இணைப்புக்கள் பொருத்திகள் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது;

உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோகமுறைமை
நீர்விநியோக முறைமை உபகரணங்கள்
தொலைதொடர்பாடல் உபகரணங்கள்
குளிரூட்டி உபகரணங்கள்

சபையின் கட்டளைப்படி,
சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

03-380

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2023, திசெம்பர் 15 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

"களனி, சிங்ஹாரமுல்லையைச் சேர்ந்த ஜனக பிரசாந்த ஹேவகே (முதலாம் கடன்பெறுநர்) என்பவரும் களனி,

சிங்ஹாரமுல்லையைச் சேர்ந்த மனோஜ் ஜீவனீ செனரத் (இரண்டாம் கடன்பெறுநர்) என்பவரும் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் நிறைவேற்றப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யசாரா கயனி கஸ்தூரியாரச்சி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.01.30 ஆந் திகதிய 383 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் ஈடுவைத்து அடமானம் வைக்கப்பட்ட இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளின் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப்பட்ட கடன்கள்/ நிதிவசதிகள் மீதான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாலும், அத்துடன் முதலாம் கடன்பெறுநர் கீழே விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளின் இறையிலி சொந்தக்காரராக அவரது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறை என்பவற்றை சொல்லப்பட்ட 383 ஆம் இலக்க முறியின் கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும்.

அத்துடன் 2023, திசெம்பர் 07 ஆந் திகதியில் உள்ளவாறு சொல்லப்பட்ட 383 ஆம் இலக்க முறியின் மீது ஒன்பது மில்லியன் பதின்மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 9,013,852.34) தொகை வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாத லாலும்.

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் (முதன்மைச் சட்டம்) கீழ் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயலாற்றுகின்ற அப்பணிப்பாளர் சபை சொல்லப்பட்ட ஒன்பது மில்லியன் பதின்மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 9,013,852.34) தொகையை அல்லது விற்பனை இடம்பெறுகின்ற நேரத்தில் செலுத்தப்படாது எஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தை மற்றும் 2023, திசெம்பர் 08 ஆந் திகதியிலிருந்து விற்பனைத்தேதி வரையில் சொல்லப்பட்ட 383 ஆம் இலக்க முறியினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஆறு மில்லியன் ஆறு இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு ரூபா ஏழு சதம் (ரூபா 6,673,747.07) தொகையின் மீதான ஆண்டுக்கு பதினைந்து தசம் ஏழு ஐந்து (15.75%) என்ற வீதத்திலான வட்டியை, முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி உறப்பட்ட விளம்பரப்படுத்தல் விற்பனை கிரயங்கள் மற்றும் வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட முறியினால் சொல்லப்பட்ட கடன்கள்/ நிதிவசதிகள் என்பவற்றுக்கான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கிழே விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகள் உரிமம்பெற்ற ஏல விற்பனையாளராகிய திரு. என். யு. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை நான்கு கடவைகளில், மாத்தறை பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் மாநகர சபை எல்லைகளினுள்ளும் வல்கம வடக்கு 409B கிராம அலுவலர் பிரிவினுள் வல்கம கிராமத்தில் அமைந்துள்ளதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எச். ஜே. சமரபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016, சனவரி 21 ஆந் திகதிய 3797 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: இக்காணியில் காணித்துண்டங்கள் 2G1, 2G, 2H மற்றும் 21; கிழக்கு: இக்காணியில் காணித்துண்டம் 5 மற்றும் காணித்துண்டம் 11 (வீதி); தெற்கு: காணித்துண்டம் 11 (வீதி) மற்றும் இக்காணியில் காணித்துண்டங்கள் 2L1 மற்றும் 2L2; மேற்கு: இக்காணியில் காணித்துண்டங்கள் 2L1 மற்றும் 2L2 மற்றும் இக்காணியில் காணித்துண்டங்கள் 2G1, 2G, 2H மற்றும் 2I; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3797 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து பதினாறு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (00ஏ. 00று. 16.70பே) இனை கொண்டுள்ளதுடன் மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A 840/42 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

சொல்லப்பட்ட 3797 ஆம் இலக்க வரைபடத்தில் மேற்கெல்லையின் மீது காட்டப்பட்ட வீதியிலும் அதன் மீதும் அதன் கீழும் செல்வழி உரிமையுடனும் வேறு ஒத்த உரிமைகளுடனும் சேர்த்து (இக்காணியில் காணித்துண்டம் 2G1)

உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோக முறைமை, நீர் விநியோக முறைமை உபகரணங்கள்,தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள் என்பவை உட்பட மேலே மேலும் விபரமாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு தற்போது அல்லது இதனகத்துப்பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய சகல மற்றும் தனியான அசைவற்ற பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி உபகரணங்கள் இணைப்புக்கள் பொருத்திகள் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

சபையின் கட்டளைப்படி,
சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

03-391

### பப்லிக் பாங்க் பர்ஹாட்

2003, நவெம்பர் 27 மற்றும் 2019, செத்தெம்பர் 30 ஆந் திகதி மலேசியாவில், பப்லிக் பாங்க் பர்ஹாட் இல் பணிப்பாளர் சபையினால் நிறுவப்பட்டதும், அங்கீகரிக்கப் பட்டதும், உறுதிப்படுத்தப்பட்டதுமான சான்றிதழ்

1988, திசெம்பர் 30 ஆம் திகதி இடப்பட்ட வங்கி வியாபார கருத்தைக் கொண்ட அதிகாரம் பெற்ற வர்த்தக வங்கியான மற்றும் 1990 ஆம் இலக்க 04 இடப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவிடுவதற்காக (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஊழிய உள்ளடக்க வங்கி மற்றும் அதன் பதிவுசெய்யும் காரியாலயத்தில் 27 ஆவது மாடி, மெனாரா பப்லிக் வங்கி, 146 ஜலன் எம்பென்க், 50450 குவலா லம்புர், மலேசியாவில் உள்ள மற்றும் கிளை காரியாலயம் மற்றும் வியாபார இடத்தில், இல. 340, ஆர். டி. த மெல் மாவத்தை, கொழும்பு 03 உள்ள, பப்லிக் பாங்க் பர்ஹாட் பணிப்பாளர் சபையின் மூலம் கீழே விபரிக்கப்பட்டவாறாக நிறுவப்பட்டுள்ளது.

தினேஸ் குமார சேனாநாயக்க
கணக்கு இல. 0803-180400-201

தினேஸ் குமார சேனாநாயக்கவின் அமெரிக்கா டொலர் ஐம்பத்தைந்தாயிரத்து எண்ணூற்றி இருபத்தியொரு சதம் நாற்பத்து நான்கு (USD 55,821.44) பணத்தொகையை இலங்கைச்சனநாயகவங்கியின் அறவிடவேண்டியுள்ளதோடு மற்றும் பெற்றுக் கொள்ள வேண்டிய அல்லது 2024, பெப்புருவரி 13 ஆந் திகதி வரை செலுத்தப்படாத வங்கி நடவடிக்கை வசதிகளோடு பிரதான முழுத்தொகை மற்றும் ஒன்றித்த வட்டியோடு புறக்கணித்துள்ளதாலும் மற்றும் எந்தவொரு நடவடிக்கையில் வங்கியின் பெயருக்கு பெறப்படும், மேற்குறித்த இலங்கைச் சனநாயக பிரசித்த நொத்தாரிசு சிவநந்தம் அன்ட் அலோசியேடிஸின் பி. எஸ். பி. கோமஸ் அவர்களால் 2016, மாச்சு 08 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 1710 கீழ் செலுத்தும் திகதியான மேற்குறித்த வசதிகளின் மீது மேலும் வட்டியோடு ஒன்றிணைந்துள்ளதோடும் அல்லது.

### அத்தோடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1990 ஆம் இல. 4 என்ற வங்கி மூலம் பிரசுரிக்கப்பட்ட கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது உறுப்புரையின் மற்றும் அதன்மீது திருத்தப்பட்ட (மேற்குறித்த 1990 ஆம் இல. 04 என்ற சட்டம்") கீழ் இங்கே பெற்றுக்கொள்வதோடும், ஏதாவது பணத்தொகை ஏதாவது கழித்து, கீழே குறிப்பிடப்பட்ட பணத்தொகையை மீள பெற்றுக்கொள்வதற்காக மேற்குறித்த கீழே ஆதனஇடாப்பில்விபரிக்கப்பட்டுள்ள மேற்குறித்தசனநாயக பிரசித்த நொத்தாரிசு சிவாநந்தம் அன்ட் அலோசியஸின் பி. எஸ். பி. கோமஸ் அவர்களால் 2016, மாச்சு 08 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டு முறி இல. 1710 மூலம் பப்லிக் பாங்க் பர்ஹாட் அடகு வைக்கப்பட்டுள்ள காணி மேற்குறித்த சனநாயகத்தின் அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான எல். பி. சேனாநாயக்க அவர்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும்,

1. செலுத்தப்படாத வங்கி வசதிகளின் மீது பிரதான முழுப்பணத்தொகையான அமெரிக்கா டொலர் நாற்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரெண்டு தசம் ஐம்பத்தைந்து (USD 49,982.55) பணத்தொகை மற்றும் அதன்மீதுள்ள இணைக்கப்பட்டுள்ள வட்டியோடு அமெரிக்கா டொலர் ஐந்தாயிரத்து எண்ணூற்றி முப்பத்தெட்டு தசம் எண்பத்தொன்பது (USD 5,838.89) பணத்தொகையோடு 2024, பெப்புருவரி 13 ஆந் திகதி வரை சேர்த்து அமெரிக்கா டொலர் ஐம்பத்தைந்தாயிரத்து எண்ணூற்றி ஒருபத்தியொன்று தசம் நாற்பத்து நான்கு (USD 55,821.44) பணத்தொகையை புறக்கணித்துள்ளதாலும்,

2. 2024, பெப்புருவரி 14 ஆந் திகதியில் இருந்து ஏலவிற்பனை தினம் வரை (இரண்டு நாட்கள் உள்ளடங்களாக) அமெரிக்கா டொலர் நாற்பத்தொன்பதாயிரத்து ஒன்பது நூற்றி எண்பத்திரெண்டு தசம் ஐம்பத்தைந்து (USD 49,982.55) மேற்குறித்த பிரதான முழுக் கணக்கின் மீது கொடுக்கவேண்டிய மேலதிக ஒன்றிணைக்கப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட வட்டி

3. மேற்குறித்த 1990 இன் இல. 04 சட்டத்தின் 13 ஆவது உறுப்புரையின் கீழ் பெற்றுக் கொள்ள வேண்டிய பணத்தொகை, செலவு மற்றும் அறவீடுகள்.

### மேலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

1990 இன் இல. 04 என்ற வங்கி மூலம் பிரசுரிக்கப்பட்ட கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆவது உறுப்புரையின் கீழ் தேவைப்பட்டுள்ளவாறு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வங்கி, இலங்கைச் கிளை செயற்பாட்டு நிறுவன பிரதானிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மற்றும் மேற்குறித்த அடகு காணி விற்பனையை மேற்குறித்த 1990 ஆம் இல. 04 என்ற சட்டத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள/ செயல்படுத்தப்பட்டுள்ள அனுசரணை செய்யப்பட்டுள்ளது.

### மேற்குறித்த முதலாவது ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பல்லே பத்துவ, மஹரகம நாகரிக சபை எல்லையினுள், இல. 19 மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 498 மலபல்ல மேற்கு கிராம சேவையாளர் பிரிவினுள் மலகல்ல கிராமத்தில் அமைந்துள்ள அதுருகிரிய வீதியில், இல. 324/ 2 என்ற விலாசத்தில் "கீனகஹவத்த அல்லது சம்புத்தி வலுகீனகஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ரி. டி. கே. ஆர். பி. பாதேகம அவர்களால் 2014, திசெம்பர் 03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 4793 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 பி என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கு: மேற்குறித்த லொட் 1ஏ மற்றும் 1சி; கிழக்கு: இல. 2029 என்ற வரைபடத்தில் மேற்குறித்த லொட் 1சி மற்றும் 2; தெற்கு: மேற்குறித்த லொட் 1 மற்றும் மேற்கு: இல. 2029 என்ற வரைபடத்தில் லொட் 2, இல. 1724 என்ற வரைபடத்தில் லொட் 5 மற்றும் 2, எல்லையாக மேற்குறித்த இல. 4793 என்ற வரைபடத்தின் பிரகாரம் (00ஏ. 00றூ. 10.90பே) அல்லது ஹெக். 0.0276 விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுழை,

பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது ஹோமாகம காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் C 131/103 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### மேற்குறித்த இரண்டாவது ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பத்துவ, மஹரகம நகர சபை எல்லையினுள், இல. 19 மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 498 மலபல்ல மேற்கு கிராம சேவையாளர் பிரிவினுள் மலகல்ல கிராமத்தில் அமைந்துள்ள "கீனகஹவத்த அல்லது சம்புத்தி வலுகீனகஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ரி. டி. கே. ஆர். பி. பாதேகம அவர்களால் 2014, திசெம்பர் 03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 4793 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 சி என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கு: அதுருகிரிய வீதி - 3 ஆவது ஒழுங்கை; கிழக்கு: அதுருகிரிய வீதி - 3 ஆவது ஒழுங்கை; தெற்கு: மேற்குறித்த லொட் 1பி மற்றும் 1ஏ மற்றும் மேற்கு: மேற்குறித்த லொட் 1பி மற்றும் 1ஏ, எல்லையாக மேற்குறித்த இல. 4793 என்ற வரைபடத்தின் பிரகாரம் (00ஏ. 00றூ. 0.50பே) அல்லது ஹெக். 0.0013 விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுழை, பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது ஹோமாகம காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் C 131/104 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்பட்டுள்ள உண்மைப்பிரதி,

கம்பனி செயலாளர்,

2024, பெப்புருவரி 27.

03-398

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2023, ஏப்பிறல் 18 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

கம்பனிப் பதிவிலக்கம் பீவி 17969 ஐக்கொண்டதும் மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட வியாபார அமைவிடத்தை இல. 257, கிரேன்ட்பாஸ் வீதி கொழும்பு 14 இல் வைத்திருக்கின்றதும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய முறையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு கம்பனியான ஈ ஐ என்ட் எம் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) (கடன்பெறுநர்) சார்பில் பிரசித்த நொத்தாரிசு அம்மணி சீ. கே. விக்ரமநாயக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.10.28 ஆந் திகதியுடைய 481 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு பீ. எச். என். ஐ. செனவிரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.09.22 ஆந் திகதியுடைய 158 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஷானிகா திசாநாயக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.06.27 ஆந் திகதியுடைய 77 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் சனுஷி எஸ். ஹேமந்த என்பவரால் 2019.10.30 ஆந் திகதியுடைய 301 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றினால் ஈடுவைத்து அடமானம் செய்யப்பட்டுள்ள இதன் அட்டவணையின் பகுதி I மற்றும் பகுதி II என்பவற்றில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளின் பிணைப்பொறுப்புக்கு எதிராக வழங்கப்பட்ட கடன்கள்/வசதிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.

அத்தோடு கடன் பெறுனர் கீழே அட்டவணையில் பகுதி I மற்றும் பகுதி II இல் விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளுக்கான அவரின் இறையிலி உரிமை, உரித்து மற்றும் அக்கறை என்பவற்றை சொல்லப்பட்ட 481, 158, 77 மற்றும் 301 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் வங்கிக்கு ஈடுவைத்திருக்கின்றார்.

அத்தோடு 2023, மாச்சு 28 ஆந் திகதியில் உள்ளவாறு சொல்லப்பட்ட 481, 158, 77 மற்றும் 301 ஆகிய ஈட்டு முறிகளின் மீது நாற்பத்தி நான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எழுபதாயிரத்து நானூற்று நாற்பத்தாறு ரூபாய் முப்பத்தாறு சதம் (ரூபா 448,570,446.36) தொகை வங்கிக்கு வருமதியாகவும் மற்றும் சேரவேண்டியதுமாக உள்ளது.

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்ட வாறான (பிரதான சட்டம்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட நாற்பத்தி நான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எழுபதாயிரத்து நானூற்று நாற்பத்தாறு ரூபாய் முப்பத்தாறு சதம் (ரூபா 448,570,446.36) தொகை அல்லது விற்பனை இடம்பெறுகின்ற நேரத்தில் செலுத்தப்படாத அதன் எஞ்சிய ஏதேனும் பாகம் மற்றும் 2023, மாச்சு 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை பின்வரும் தொகைகள் மீதான வட்டியையும், அதாவது

i) சொல்லப்பட்ட 481, 158, 77 மற்றும் 301 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட பத்தொன்பது கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (ரூபா 193,450,000.00) தொகை மீது வருடத்துக்கு பதினான்கு தசம் இரண்டு ஐந்து (14.25%) சதவீதத்தில்.

ii) சொல்லப்பட்ட 481, 158, 77 மற்றும் 301 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட பதினொரு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து மூன்றாயிரத்து நானூற்று தொண்ணூற்று மூன்று ரூபாய் தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூபா 115,703,493.99) தொகை மீது வருடத்துக்கு இருபத்தி ஐந்து (25%) சதவீதத்தில்.

iii) சொல்லப்பட்ட 481, 158, 77 மற்றும் 301 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட ஏழு

கோடியே நாற்பது இலட்சத்து முப்பத்திரெண்டாயிரத்து எண்ணூற்று அறுபது ரூபாய் எண்பத்து மூன்று சதம் (ரூபா 74,032,860.83) தொகை மீது வருடத்துக்கு எட்டு தசம் ஒன்று எட்டு (8.18%) சதவீதத்திலும்

மற்றும் பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் ஏற்பட்ட சகல விளம்பரப்படுத்தல் கிரயங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பவற்றுடன் சேர்த்து கொடுப்பனவுகள் (ஏதேனும் இருந்தால்) அவற்றைக் கழித்து மீட்டுக்கொள்வதற்காக சொல்லப்பட்ட ஈட்டு முறிகளால் சொல்லப்பட்ட கடன்கள்/ வசதிகள் என்பவற்றுக்காக பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளுக்கான இறையிலி மற்றும் ஏனைய உரிமை உரித்து மற்றும் அக்கறை உட்பட ஆதனம் மற்றும் வளவுகளை உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய எல். பீ. சேநாநாயக அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**
**(காணி மற்றும் வளவுகளின் விபரம்)**

பகுதி I:

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில், சியனே கோரளை அதிகாரி பற்று, தலுகம நகர சபை எல்லைகளுக்குள் ஹூனுபிடிய என்ற இடத்தில் தற்போது வரிமதிப்பீட்டிலக்கம் 24, பிஷொப்ஸ் வீதியில் அமைந்துள்ள "ஆநந்த" என அழைக்கப்படுகின்றதும் மற்றும் அறியப்பட்டதுமான சகல கட்டடங்கள் மற்றும் அதனகத்தேயுள்ள சகலதையும் உள்ளடக்கி "கஹடகஹவத்த மற்றும் தெல்கஹ வத்த" என அழைக்கப்படுகின்ற காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் வீ. கார்திகேசு என்பவரால் 1942, சனவரி 21 ஆந் திகதியுடைய 132 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 2 என அடையாளமிடப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 132 ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் 2 இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு : அதே காணியின் துண்டம் 1; கிழக்கு: புகையிரத வளவு; தெற்கு: கொமர்ஷல் கம்பனி லிமிடெட் இற்கு சொந்தமான காணி மற்றும் மேற்கு: பிஷொப்ஸ் வீதி என அழைக்கப்படுகின்ற வத்தளையிலிருந்து எவரிவத்த செல்கின்ற வீதி (ஹூனுபிடிய முதல் வத்தளை செல்கின்ற வீதி எனவும் அழைக்கப்படுகின்றது) அத்தோடு மூன்று றூட்கள் மற்றும் முப்பத்தெட்டு பேர்ச் (00ஏ. 03றூ. 38பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. அத்தோடு உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஆர்தனாயக என்பவரால் தயாரிக்கப்பட்ட 1952.02.02 ஆந் திகதியுடைய 285 ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப மூன்று றூட்கள் மற்றும் முப்பத்தைந்து பேர்ச் (00ஏ. 03றூ. 35பே) விஸ்தீரணத்தைக் கொண்டது அத்தோடு உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. எச். பிலிப்பையா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986.01.13 ஆந் திகதியுடைய 4688 ஆம் இலக்க மிக அண்மைய நில அளவை வரைபடத்திற்கு ஏற்ப மூன்று றூட்கள் மற்றும் முப்பது தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 03றூ. 30.5பே) விஸ்தீரணத்தைக் கொண்டு கொழும்பு காணிப் பதிவகத்தில் C 503/322 பிரிவு/இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோக முறைமை, நீர் விநியோக முறைமை உபகரணங்கள், தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள் என்பவை உட்பட மேலே நன்கு விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டத்துக்கு தற்போது பொருத்தியுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் காலத்துக்கு காலம் பொருத்தப்படக் கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக் கூடிய சகல மற்றும் தனியான அசைவுள்ள பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள், உபகரணங்கள், இணைப்புக்கள், பொருத்திகள் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

பகுதி II

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளை தாசிய பற்று நீர்கொழும்பு பதிவுப் பிரிவில், கடான உள்ளூராட்சி அதிகார சபை பிரிவில், கடான பிரதேச செயலகப் பிரிவுக்குள் இல. 146 அம்பலமுல்ல கிராம சேவையாளர் பிரிவில் கிந்திகொட கிராமத்தில் அமைந்துள்ள "சூரியகஹ கும்புர தந்திகே அல்லது தம்புவகே கும்புர கொடெல்ல" என அழைக்கப்படுகின்ற காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே. சீ. பர்னாந்து என்பவரால் 1943.10.02 ஆந் திகதியுடைய 6111 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்ட ஒரு காணித்துண்டம் சொல்லப்பட்ட 6111 ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப சொல்லப்பட்ட காணித்துண்டத்தின் எல்லைகள் பின்வருமாறு வடக்கு: ரன்முககே ஜுஸ் பீரிஸ் என்பவரின் பின்னுரித்தாளர்களுக்கு சொந்தமான வயல் காணி மற்றும் எம். பீ. பர்னாந்து மற்றும் ஏனையவர்களுக்குச் சொந்தமான காணி ; கிழக்கு: இர்ரிப்புகே எலரிஸ் என்பவருக்கு சொந்தமான காணி, வேர்லியானு என்பவருக்கு சொந்தமான காணி, எம். பீ. பர்னாந்து என்பவருக்கு சொந்தமான காணி மற்றும் குருகமகே அந்தோனி பெரேரா என்பவருக்கு சொந்தமான காணி; தெற்கு: குருகமகே அந்தோனி பெரேரா என்பவருக்கு சொந்தமான காணி மற்றும் தந்துகம ஓயா மற்றும் மேற்கு: பீ. ஜோன் பர்னாந்து என்பவருக்கு சொந்தமான வயல் காணி இரண்டு ஏக்கர்கள் இரண்டு றூட்கள் மற்றும் இருபத்தாறு பேர்ச் (02ஏ. 02றூ. 26பே) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் (C 705/44 பிரிவு/இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோக முறைமை, நீர் விநியோக முறைமை உபகரணங்கள், தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள் என்பவை உட்பட மேலே நன்கு விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணித் துண்டத்துக்கு தற்போது பொருத்தியுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் காலத்துக்கு காலம் பொருத்தப்படக் கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக் கூடிய சகல மற்றும் தனியான அசைவுள்ள பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள், உபகரணங்கள், இணைப்புக்கள், பொருத்திகள் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

சபையின் கட்டளைப்படி,
சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

03-403

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "ரிசில்கோ இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2018.09.18 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ரிசில்கோ இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ரிசில்கோ இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி சஞ்ஜீவ திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

சஞ்ஜீவ திசாநாயக்க,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவீ 00204407
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,

03-405

---

## செலான் வங்கி பீ. எல்.சீ.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கிளை: காலி
கணக்கு இலக்கம்: 0160-34509551-101

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2024.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஆகையால், தங்கேதர இல் கோபிகா பிரியரஞ்சிகா மிரிஸ்ஸ லொகுகே உடப்பு என்பவர் "கடப்பாட்டாளர்கள்/ ஈடுவைத்தவர்கள்", என்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய PQ 9 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு டப்ளியூ. தாசித பிரியந்தி என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட 2023, நவெம்பர் 01 ஆந் திகதி இடப்பட்ட 2652 ஆம் இலக்க ஈட்டு முறி மீதான வருமதியாக, செலான் வங்கி பீஎல்சீ கணக்கில் நிலுவையாக உள்ள முதல், வட்டி என்பன உள்ளடங்கலாக 2024, மாச்சு 01 ஆந் திகதி அன்று வரையிலான மொத்தத் தொகையாக, ஆறு மில்லியன் இருநூற்று எண்பத்தி ஆறாயிரத்து நானூற்று அறுபத்தொன்பது ரூபாய் நாற்பத்து மூன்று சதம் (ரூபா 6,286,469.43) கொண்ட பணத்தொகை அத்துடன், சொல்லப்பட்ட எல்லாம் வட்டி உள்ளடங்கலாக ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று ரூபாய் எழுபத்து மூன்று சதம் (ரூபா 5,989,273.73) அத்துடன், சொல்லப்பட்ட 2024, மாச்சு 02 ஆந் திகதி வரையிலான வருடாந்த வட்டியாக பதினேழு சதவீதம் (17%) எல்லாம் உள்ளடங்கலாக சமப்படுத்தப்பட்ட தவணை முன்னேற்றங்கள் வசதி வாய்ப்புகள் மீதும் அத்துடன் மேற் குறிப்பிடப்பட்ட முறியில் சொல்லப்பட்டவைகளும் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 2652 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம், செலான் வங்கி பீஎல்சீ நிறுவனத்துக்கு ஈடு வைக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் மதிப்பிடப்பட்ட ஆறு மில்லியன் இருநூற்று எண்பத்தி ஆறாயிரத்து நானூற்று அறுபத்தொன்பது ரூபாய் நாற்பத்து மூன்று சதம் (ரூபா 6,286,469.43) கொண்ட பணத்தொகையுடன் 2024, மாச்சு 02 ஆந் திகதியில் இருந்து விற்பனையில் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளும் நாள் வரை, அதன் மீதான வட்டியுடன் விளம்பரச் செலவுகள் மற்றும் இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து இச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத் தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகே பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

## அட்டவணை

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் காலி நான்கு கல்லறைகள் பிரதேச செயலகம் பிரிவிற்குள் மற்றும் காலி மாநகர சபை எல்லைக்குள் 970 தாங்கேதர கிராம சேவையாளர் பிரிவுக்குள் தொரவாலா கனுவாலா அகபோடாவின் லொட் சி இன் வரையறுக்கப்பட்ட லொட் சி1 இன் 17 மற்றும் 18 இணைக்கப்பட்ட காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. ஜி. டீ. யூ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015.03.11 ஆந் திகதி இடப்பட்ட விரித்துரைக்கப்பட்ட வரைபட இல. 36ஏ/ 2015 லொட் ஏ என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் பகிரப்பட்ட மற்றும் மேற் கூறப்பட்ட லொட் ஏ என அடையாளமிடப்பட்ட காணியின் எல்லைகள், வடகிழக்கு: வீதி வழியாக (20 அடி அகலம்) மற்றும் வரிமதிப்பீட்டு இல. 357ஏ/ 8, ஹிரிம்புரா வீதி இன் மூலம்; தென்கிழக்கு: மஹாவத்த மூலம்; தெற்கு: லொட் 19 வரிமதிப்பீட்டு இல. 357ஏ/7, ஹிரிம்புரா வீதி இன் மூலம்; மேற்கு: லொட் 21 இன் மூலம் (10 அடி அகல சாலை; வடமேற்கு: அதே காணியின் லொட்ஸ் 27 மற்றும் 28 இன் மூலம் மற்றும் அதன் அளவானது பன்னிரெண்டு தசம் நான்கு பேர்ச் (00ஏ. 00றூ. 12.4பே) அல்லது ஹெக். 0.03139 அனைத்து அசையும் மற்றும் அசையா ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் இப்போதும் இங்கும் சேமித்து வைக்கப்பட்ட பிறகு, மற்றும் தோட்ட கட்டிடங்கள் சாதனங்கள் அல்லது கட்டுமானங்கள், அதன் மீது நிற்கும் மற்றும் இனிமேல் அமைக்கப்படும், ஆனால் அவை மட்டும் அல்ல ஒரு காண்டோமினியம் திட்டம் மற்றும் ஒரு காண்டோமினியம் பிரகடனத்தின் கீழ் அனைத்து காண்டோமினியம் நிலப் பார்சல்கள்/அலகுகள், மண், மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலாக உள்ள காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

3-393/1

---

**செலான் வங்கி பீ. எல்.சீ.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கிளை: மொரட்டுவ
கணக்கு இலக்கம்: 0090-12849791-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2024.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஆகையால், டிஎம்என் எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் என்ற மொரட்டுவ இல் பதிவு அலுவலகத்தை கொண்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு PV 101611 என்ற பதிவு இலக்கத்தை கொண்டதும் மற்றும் மொரட்டுவையைச் சேர்ந்த வண்ணக்குவத்த வடுகே நீலக இஷான் பெர்ணாண்டோ "கடப்பாட்டாளர்/ ஈடுவைத்தவர்" என்றவகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய PQ 9 என்ற குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு சண்டமாலி பாரதிரத்ன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2017, திசெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட 2024 இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறி மீதான வருமதியாக, செலான் வங்கி பீஎல்சீ கணக்கில் நிலுவையாக உள்ள முதல், வட்டி என்பன உள்ளடங்கலாக 2024, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று வரையிலான மொத்தத் தொகையாக, இருபத்தேழு மில்லியன் ஐந்நூற்று தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் அறுபத்து ஒன்பது சதம் (ரூபா 27,593,329.69) கொண்ட பணத்தொகை அத்துடன், சொல்லப்பட்ட எல்லாம் வட்டி உள்ளடங்கலாக இருபத்தைந்து மில்லியன் ஐந்தாயிரத்து ஐந்நூறு ரூபாய் (ரூபா 25,005,500.00) கொண்ட பணத்தொகை வட்டி அத்துடன், சொல்லப்பட்ட 2024, பெப்புருவரி 29 ஆந் திகதி வரையிலான வருடாந்த வட்டியாக பதினான்கு சதவீதம் (14%) எல்லாம் உள்ளடங்கலாக தவணைக் கடன் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் மறுநிதியளிப்பு வசதிவாய்ப்பினூடாக மீதும் அத்துடன் மேற் குறிப்பிடப்பட்ட முறியில் சொல்லப்பட்டவைகளும் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 2024 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் மூலம், செலான் வங்கி பீஎல்சீ நிறுவனத்துக்கு ஈடு வைக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் மதிப்பிடப்பட்ட இருபத்தேழு மில்லியன் ஐந்நூற்று தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் அறுபத்து ஒன்பது சதம் (ரூபா 27,593,329.69) கொண்ட பணத்தொகையுடன் 2024, பெப்புருவரி 29 ஆந் திகதியிலிருந்து விற்பனையில் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளும் நாள் வரை, அதன் மீதான வட்டியுடன் விளம்பரச் செலவுகள் மற்றும் இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து இச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத் தொகையையும்

அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகே என்பவரினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிடி கோரள பள்ளே பத்துவே மொரட்டுவ மாநகர சபை எல்லைகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குல் கொரலவெல்ல கிராம சேவையாளர் பிரிவுக்குள் கொரலவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள மதங்கஹவத்த எனப்படும் காணி (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008.02.26 ஆந் திகதியிடப்பட்ட சர்வே வரைபட இலக்மக் 5187 இல் லொட் ஒரு துணைப்பிரிவாக இருப்பது) உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008.03.06 ஆந் திகதியிடப்பட்ட சர்வே வரைபட இலக்கம் 5197ஏ இல் லொட 19 என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் பகிரப்பட்ட லொட் 19 என அடையாளமிடப்பட்ட காணியின் எல்லைகள், வடக்கு: பி. டி. எஸ். சிறிரத்னவால் உரிமை கோரப்பட்ட அதே காணியின் மீதிப் பகுதியின் மூலம்; கிழக்கு: லொட்ஸ் 35 இன் மூலம்; தெற்கு: லொட் 13 மூலம் (வீதி 20 முதல் 30 அடி அகலம்); மேற்கு: இங்கு 13 மற்றும் 18 மூலம் மற்றும் அதன் அளவானது இருபத்து நான்கு பேர்ச் (00ஏ. 00றூ. 24பே) மற்றும் காணி, கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக உள்ள காணி.

வரைபட இலக்கம் 5197ஏ இல் உள்ள லொட 13 மேல் வழியின் உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

3-393/2

---

**செலான் வங்கி பீ. எல்.சீ.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கிளை: கொட்டாவ
கணக்கு இலக்கம்: 0330-0605020-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2024.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஆகையால், ஹோமாகமவை சேர்ந்த விரந்த ஹரிச்சந்திர ஹெட்டியாராச்சி என்பவர் "கடப்பாட்டாளர்/ஈடுவைத்தவர்", என்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய PQ 9 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு பி. எம். குணவர்தன என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2014, மாச்சு 18 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான 1290, 1291, 1292 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீதான வருமதியாக, அடமானக் கருவிகள் தலைப்புச் சான்றிதழ் இல. 00030048113 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான நாற் புத்தக இல. 3/ 1026, 3/ 1027, 3/1028, 2015, யூன் 16 ஆந் திகதி இடப்பட்ட 3/3120, 2015, யூலை 30 ஆந் திகதி இடப்பட்ட 3/4209 மற்றும் 2018, மே 11 ஆந் திகதி இடப்பட்ட 3/ 3533 முறையே மற்றும் அடமானக் கருவிகள் தலைப்புச் சான்றிதழ் இல. 0003155 இல் பதிவு செய்யப்பட்ட நாள் புத்தக இல. 3/ 1343, 2016, பெப்புருவரி 24 ஆந் திகதி இடப்பட்ட மற்றும் 2017, யூன் 12 ஆந் திகதி செலான் வங்கி பீஎல்சீ கணக்கில் நிலுவையாக உள்ள முதல், வட்டி என்பன உள்ளடங்கலாக 2023, ஒற்றோபர் 04 ஆந் திகதி அன்று வரையிலான மொத்தத் தொகையாக, நூற்று ஐம்பத்து மூன்று மில்லியன் எண்ணூற்று எழுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபாய் முப்பத்து நான்கு சதம் (ரூபா 153,872,738.34) கொண்ட பணத்தொகை அத்துடன், சொல்லப்பட்ட எல்லாம் வட்டி உள்ளடங்கலாக நூற்று பதினேழு மில்லியன் ஐந்நூற்று எழுபத்தாறாயிரம் ரூபாய் (ரூபா 117,576,000.00) அத்துடன், சொல்லப்பட்ட 2023, ஒற்றோபர் 05 ஆந் திகதி வரையிலான வருடாந்த வட்டியாக இருபது தசம் ஒன்று ஒன்று சதவீதம் (20.11%) எல்லாம் உள்ளடங்கலாக தவணைக் கடன் வசதி வசதி வாய்ப்புகள் மீதும் அத்துடன் மேற் குறிப்பிடப்பட்ட முறியில் சொல்லப்பட்டவைகளும் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட பிரசித்த நொத்தாரிசு பி. எம். குணவர்தன என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2014, மாச்சு 18 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான 1290, 1291, 1292 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீதான வருமதியாக, அடமானக் கருவிகள் தலைப்புச் சான்றிதழ் இல. 00030048113 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான நாற் புத்தக இல. 3/1026, 3/1027, 3/1028, 2015, யூன் 16 ஆந் திகதி இடப்பட்ட 3/3120, 2015, யூலை 30

ஆந் திகதி இடப்பட்ட 3/4209 மற்றும் 2018, மே 11 ஆந் திகதி இடப்பட்ட 3/ 3533 முறையே மற்றும் அடமானக் கருவிகள் தலைப்புச் சான்றிதழ் இல. 0003155 இல் பதிவு செய்யப்பட்ட நாள் புத்தக இல. 3/1343, 2016, பெப்புருவரி 24 ஆந் திகதி இடப்பட்ட மற்றும் 2017, யூன் 12 ஆந் திகதி மூலம், செலான் வங்கி பீஎல்சீ நிறுவனத்துக்கு ஈடு வைக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் மதிப்பிடப்பட்ட நூற்று ஐம்பத்து மூன்று மில்லியன் எண்ணூற்று எழுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபாய் முப்பத்து நான்கு சதம் (ரூபா 153,872,738.34) கொண்ட பணத்தொகையுடன் 2023, ஒற்றோபர் 05 ஆந் திகதியில் இருந்து விற்பனையில் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளும் நாள் வரை, அதன் மீதான வட்டியுடன் விளம்பரச் செலவுகள் மற்றும் இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து இச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத் தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திரு. துசித் கருணாரத்ன என்பவரினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் இலக்கம் 486சி, கலவிலவத்தை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள சர்வேயர் ஜெனரலால் தயாரிக்கப்பட்ட காடாஸ்ட்ரல் வரைபடம் இல. 520001 மண்டல இல. 21 இல் லொட் இல. 0350 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் அளவானது பூச்சியம் தசம் இரண்டு எட்டு ஐந்து ஒன்பது ஹெக்டேயர் (ஹெக். 0.2859) மற்றும் காணி, மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக உள்ள காணி.

பிரசித்த நொத்தாரிசு பி. எம். குணவர்தன என்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2014, மாச்சு 18 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான 1290, 1291, 1292 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீதான வருமதியாக, அடமானக் கருவிகள் தலைப்புச் சான்றிதழ் இல. 00030048113 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட 2014, ஒற்றோபர் 01 ஆந் திகதி இடப்பட்ட அனைத்துமான நாற் புத்தக இல. 3/1026, 3/1027, 3/1028, 2015, யூன் 16 ஆந் திகதி இடப்பட்ட 3/3120, 2015, யூலை 30 ஆந் திகதி இடப்பட்ட 3/4209 மற்றும் 2018, மே 11 ஆந் திகதி இடப்பட்ட 3/3533 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட சொத்து.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குள் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் கலவிலவத்தை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள சர்வேயர் ஜெனரலால் தயாரிக்கப்பட்ட காடாஸ்ட்ரல் வரைபட இல. 520001 தொகுதி இல. 21 இல் லொட் இல. 0142 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் அளவானது பூச்சியம் தசம் ஒன்று ஏழு ஆறு ஆறு ஹெக்டேயர் (ஹெக். 0.1766) மற்றும் காணி, மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்கலாக உள்ள காணி சான்றிதழ் இல. 0003155.

2016, பெப்புருவரி 24 ஆந் திகதி இடப்பட்ட நாள் புத்தக இல. 3/ 1343 மற்றும் 2017, யூன் 12 ஆந் திகதி இடப்பட்ட 3/ 4013 ஆகியவற்றின் கீழ் முறையே தலைப்புச் சான்றிதழ் இல. 0003155 இல் பதிவுசெய்யப்பட்ட அடமானக் கருவிகளின் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

3-393/3

---

**செலான் வங்கி பீ. எல்.சீ.**
(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கிளை: கம்பஹா
கணக்கு இலக்கம்: 0110-12777090-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2024.03.15 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ஆகையால், கம்பஹா டெவலப்மெண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்ற கூட்டிணைக்கப்பட்ட கம்பனி கம்பஹா இல் பதிவு அலுவலகத்தை கொண்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு PV 13301 என்ற வியாபார பதிவு இலக்கத்தை கொண்டதும் "கடப்பாட்டாளர்/ஈடுவைத்தவர்" என்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய PQ 9 என்ற இலக்கத்தின் கீழ் பதீவு செய்யப்பட்டது) சார்பில்,

பிரசித்த நொத்தாரிசு டப்ளியு. ஏ. ஆர். ஜே. வெல்லப்பிலி என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2017, யூலை 11 ஆந் திகதி இடப்பட்ட 1312 மற்றும் 1313 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறிகளின் மீதான வருமதியாக, செலான் வங்கி பீஎல்சீ கணக்கில் நிலுவையாக உள்ள முதல், வட்டி பணத்தொகை வட்டி அத்துடன் (கடனைக் காலம் தாழ்த்தி திருப்பிச் செலுத்துவதற்காக சட்ட உரிமை நீங்கலாக) வசதிவாய்ப்புகள் சொல்லப்பட்ட என்பன உள்ளடங்கலாக 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று வரையிலான மொத்தத் தொகையாக இருநூற்று முப்பத்து நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று பதினெட்டு ரூபாய் எண்பத்து மூன்று சதம் (ரூபா 234,989,818.83) கொண்ட பணத்தொகை வட்டி அத்துடன், சொல்லப்பட்ட எல்லாம் உள்ளடங்கலாக முறிகளின் மீதும் அத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட முறியில் சொல்லப்பட்டவைகளும் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் மூலம், செலான் வங்கி பீஎல்சீ நிறுவனத்துக்கு ஈடு வைக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் மதிப்பிடப்பட்ட இருநூற்று முப்பத்து நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று பதினெட்டு ரூபாய் எண்பத்து மூன்று சதம் (ரூபா 234,989,818.83) கொண்ட பணத்தொகையுடன் 2023, மாச்சு 28 ஆந் திகதியில் இருந்து விற்பனையில் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளும் நாள் வரை, அதன் மீதான வட்டியுடன் விளம்பரச் செலவுகள் மற்றும் இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து இச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத் தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகே வினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அ) சொல்லப்பட்ட மீள்திட்டமிடப்பட்ட தவணைக் கடன் 1 வசதி வாய்ப்பினூடாக ரூபா 41,975,000.00 கொண்ட தொகை ஐம்பத்தெட்டு மில்லியன் நானூற்று பதினாறாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றேழு ரூபாய் பதினான்கு சதம் (ரூபா 58,416,597.14) கொண்ட தொகைக்கான அத்துடன் 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று நாற்பத்தொரு மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய் (ரூபா 41,975,000.00) வட்டியுடன் சேர்த்து பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதம் (17.75%) ஆண்டுக்கு 2023, மாச்சு 28 ஆந் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(ஆ) சொல்லப்பட்ட மீள்திட்டமிடப்பட்ட தவணைக் கடன் 2 வசதிவாய்ப்பினூடாக ரூபா 55,200,000.00 கொண்ட தொகை எழுபத்தாறு மில்லியன் எண்ணூற்று இருபத்தோராயிரத்து எண்ணூற்று இருபத்தாறு ரூபாய் முப்பத்தைந்து சதம் (ரூபா 76,821,826.35) கொண்ட தொகைக்கான அத்துடன் 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று ஐம்பத்தைந்து மில்லியன் இருநூறாயிரம் ரூபாய் (ரூபா 55,200,000.00) வட்டியுடன் சேர்த்து பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதம் (17.75%) ஆண்டுக்கு 2023, மாச்சு 28 ஆந் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(இ) சொல்லப்பட்ட மீள்திட்டமிடப்பட்ட தவணைக் கடன் 3 வசதி வாய்ப்பினூடாக ரூபா 29,707,000.00 கொண்ட தொகை நாற்பத்தொரு மில்லியன் முந்நூற்று நாற்பத்து மூவாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு ரூபாய் ஐம்பத்து மூன்று சதம் (ரூபா 41,343,224.53) கொண்ட தொகைக்கான அத்துடன் 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று இருபத்தொன்பது மில்லியன் எழுநூற்று ஏழாயிரம் ரூபாய் (ரூபா 29,707,000.00) வட்டியுடன் சேர்த்து பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதம் (17.75%) ஆண்டுக்கு 2023, மாச்சு 28 ஆந் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(ஈ) சொல்லப்பட்ட மீள்திட்டமிடப்பட்ட தவணைக் கடன் 4 வசதி வாய்ப்பினூடாக ரூபா 36,915,000.00 கொண்ட தொகை ஐம்பத்தொரு மில்லியன் முந்நூற்று எழுபத்து நான்காயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றாறு ரூபாய் நாற்பத்து மூன்று சதம் (ரூபா 51,374,596.43) கொண்ட தொகைக்கான அத்துடன் 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று முப்பத்தாறு மில்லியன் தொள்ளாயிரத்து பதினைந்தாயிரம் ரூபாய் (ரூபா 36,915,000.00) வட்டியுடன் சேர்த்து பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதம் (17.75%) ஆண்டுக்கு 2023, மாச்சு 28 ஆந் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(உ) சொல்லப்பட்ட மீள்திட்டமிடப்பட்ட தவணைக் கடன் 4 (a) வசதி வாய்ப்பினூடாக ரூபா 5,122,601.33 கொண்ட தொகை ஏழு மில்லியன் முப்பத்து மூவாயிரத்து ஐந்நூற்று எழுபத்து நான்கு ரூபாய் முப்பத்தெட்டு சதம் (ரூபா 7,033,574.38) கொண்ட தொகைக்கான அத்துடன் 2023, மாச்சு 27 ஆந் திகதி அன்று ஐந்து மில்லியன் நூற்று இருபத்தி இரண்டாயிரத்து அறுநூற்று ஒரு ரூபாய் முப்பத்து மூன்று சதம் (ரூபா 5,122,601.33) வட்டியுடன் சேர்த்து பதினேழு தசம் ஏழு ஐந்து சதவீதம் (17.75%) ஆண்டுக்கு 2023, மாச்சு 28 ஆந் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல காணி பதிவுப் பிரிவில் சியனே கோரளையின் உடுகஹா பத்துவில், அத்தனகல்ல பிரதேச சபை பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் நம்படலுவ மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குள், நம்படலுவ கிராமத்தில் அமைந்துள்ள "அம்பகஹவத்த கொட்டாச" என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். மன்னப்பெரும

என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 16 ஆந் திகதி இடப்பட்ட 1398 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் மேற் கூறப்பட்ட லொட் 1 என்ற காணியின் எல்லைகள் வடக்கு: பிரதான வீதி மற்றும் ஏ. பீ. சென்ஹாமியின் வாரிசுகளுக்கு சொந்தமான காணியின் மூலம்; கிழக்கு: எலன் பீரிஸ் இன் வாரிசுகளுக்கு சொந்தமான காணியின் மூலம்; தெற்கு: ஏ. எல்பர்ட் மற்றும் பிறருக்கு சொந்தமான காணியின் மூலம்; மேற்கு: லால் பெரேரா மற்றும் பிறருக்கு சொந்தமான காணியின் மூலம் மற்றும் அதன் அளவானது இரண்டு றூட் மற்றும் முப்பத்தேழு பேர்ச் (00ஏ. 02றூ. 37பே) மற்றும் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலான காணி.

உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. ஏ. ஆர். ஜே. வெல்லப்பிலி என்பவரினால் சான்றளிக்கப்பட்ட 2017, யூலை 11 ஆந் திகதி இடப்பட்ட 1313 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறியின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட சொத்து.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல காணி பதிவுப் பிரிவில் சியனே கோரளையின் மெத பத்துவில், அத்தனகல்ல பிரதேச சபை பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் தல்காஸ்மோட் கிழக்கில் 328/ பி கிராம சேவையாளர் பிரிவுக்குள், தல்கஸ்மோட் கிராமத்தில் அமைந்துள்ள "ஹிக்கஹவத்த" என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013, பெப்புருவரி 18 ஆந் திகதி இடப்பட்ட 4307ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் மேற் கூறப்பட்ட லொட் ஏ என்ற காணியின் எல்லைகள் வடக்கு: ரோஹன நெத்தசிங்க உரிமை கோரும் அதே காணியின் இருப்புப் பகுதியின் மூலம்; கிழக்கு: சந்திரா ஏகநாயக்க மற்றும் அஜித நெத்தசிங்க (வரைபட இலக்கம் 426 இல் உள்ள லொட் 2) ஆகியோரால் உரிமை கோரப்பட்ட காணியின் மூலம்; தெற்கு: வீதி வழியாக (RDA) (வெயங்கொடையில் இருந்து நிட்டம்புவ வரை; மேற்கு: ஜயலதா வீரசேகர மற்றும் லீலா குணரத்ன ஆகியோரால் உரிமை கோரப்பட்ட காணிகள் மூலம் மற்றும் அதன் அளவானது இரண்டு றூட் மற்றும் இருபது பேர்ச் (00ஏ. 02றூ. 20பே) மற்றும் அதன் மீது நிற்கும் மற்ற அனைத்தும் அடங்கலான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

3-393/4

---

## திருத்தப்பட்ட அறிவித்தல்

செலான் வங்கி பீஎல்சீ - பொரளை கிளை, வெதகே என்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் வெதகே டொன் வசந்த குமார

கணக்கு இலக்கம்: 0820-33525006-001

2023.11.10 ஆந் திகதி இடப்பட்ட வர்த்தமானி வெளியீடு தொடர்பாக, பணிப்பாளர் சபை கூட்டத்தின் திகதிய 2023.09.26 க்குப் பதிலாக 2023.10.24 ஆந் திகதி என திருத்தி வாசிக்கப்பட வேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

3-393/5